**வணக்கம்**

**ஆகாஷ்வாணி - புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : ரோஷ்னா காசிம்**

**நாள் 23.02.2025 ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

---

***தலைப்புச் செய்திகள்***

நாட்டில் சாதனை படைத்த பெண்களை இந்தாண்டு மகளிர் தினத்தன்று அடையாளப் படுத்த முடிவு செய்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

அனைவருக்கும் சுகாதாரம் என்பது தனது அரசின் முக்கியத் தூண்களில் ஒன்றாகும் என பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி சட்டப்பேரவையை, காகிதங்கள் இல்லாத சட்டப் பேரவையாக உருவாக்கும் வகையில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கான கணினி பயிற்சியை முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று துவக்கி வைத்தார்.

மோடி 1 - (18 )

நாட்டில் சாதனை படைத்த பெண்களை இந்தாண்டு மகளிர் தினத்தன்று அடையாளப் படுத்த முடிவு செய்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்துள்ளார். அவர் இன்று காலை ஆகாஷ்வாணியில் மனதின் குரல் நிகழ்ச்சியில் உரையாற்றினார். இதற்காக, வரும் மகளிர் தினத்தன்று தனது எக்ஸ் மற்றும் இன்ஸ்டாகிராம் ஊடக கணக்குகளை ஒரு

நாளைக்கு ஒதுக்கியுள்ளதாகவும், இந்த தளங்களில் இவர்கள் தங்களுடைய பணிகளையும் அனுபவங்களையும் நாட்டு மக்களோடு பகிர்ந்து கொள்வார்கள் என்று பிரதமர் குறிப்பிட்டார். வரும் மகளிர் தினத்தன்று அனைவரும் இணைந்து மகத்தாக பெண் சக்திக்கு மரியாதை செலுத்த முன்வருமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டு மக்களை கேட்டுக்கொண்டார்.

செயற்கை நுண்ணறிவுத் துறையில் இந்தியா வேகமான ஒரு வலுவான அடையாளத்தை உருவாக்கி வருவதாக கூறிய அவர், புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வதிலும், முயற்சிப்பதிலும் இந்திய மக்கள் எவருக்கும் சளைத்தவர்கள் அல்ல என்றும் கூறினார். சமீபத்தில் பாரீசில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு செயல் உச்சி மாநாட்டிற்காக அவர் மேற்கொண்ட பயணத்தின்போது இந்த துறையில் இந்தியாவின் முன்னேற்றத்தை உலகம் பாராட்டியதை குறிப்பிட்டதில் அவர் மகிழ்ச்சி

மோடி 2 - (16 )

அடைந்தார். நாட்டு மக்கள் பல்வேறு பணிகளுக்கு செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துகின்றனர் என்று கூறிய பிரதமர், தெலங்கானாவில் அடிலாபாத்தில் உள்ள அரசு பள்ளியின் ஆசிரியர் திரு.தோடசம் கைலாசின் உதாரணத்தை மேற்கோள் காட்டினார். விண்வெளி அல்லது செயற்கை நுண்ணறிவு என பல்வேறு துறைகளில் இளைஞர்களின் பங்கு அதிகரித்து வருவதை பாராட்டினார்.

கடந்த மாதம் இஸ்ரோவின் 100ஆவது ராக்கெட் ஏவப்பட்டது குறித்து பிரதமர் பெருமிதம் தெரிவித்தார். விண்வெளி அறிவியலில் ஒவ்வொரு நாளும் புதிய உயரங்களைத் தொட வேண்டும் என்ற நாட்டின் உறுதியை இது பிரதிபலிக்கிறது என்றும் அவர் கூறினார். கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் பிற நாடுகளின் செயற்கைக் கோள்கள் உட்பட சுமார் 460 செயற்கைக் கோள்கள் ஏவப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார். விண்வெளி விஞ்ஞானிகள் குழுவில் பெண்களின் பங்கு தொடர்ந்து அதிகரித்து வருவதாக பிரதமர் தெரிவித்தார். இத்துறை இளைஞர்களின்

விருப்பமான துறையாக மாறி இருப்பதற்கும் பிரதமர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

மோடி 3 - (17 )

வரும் 28ஆம் தேதி தேசிய அறிவியல் தினம் கொண்டாடப்பட உள்ளதாகவும், இத்தினத்தில் ஒரு விஞ்ஞானியாக ஒவ்வொருவரும் விண்வெளி மையத்தைப் பார்வையிட வேண்டும் என்றும், இது அறிவியல் மீதான ஆர்வத்தை அதிகரிக்கச் செய்யும் என்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

இந்த ஆண்டு தேசிய விளையாட்டுப் போட்டிகளில் டீன் ஏஜ் சாம்பியன்களின் எண்ணிக்கைகளை குறித்து பிரதமர் பிரமிப்பு தெரிவித்தார். தேசிய விளையாட்டுப் போட்டிகளின் போது உடல் பருமன் என்ற தலைப்பை எழுப்பியதாக பிரதமர் தெரிவித்தார். ஒரு உடல் தகுதியும் ஆரோக்கியமும் கொண்ட தேசமாக மாற உடல் பருமன் பிரச்சனையை சமாளிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். இன்று 8 பேரில் ஒருவர் உடல் பருமனாக இருப்பதாகவும், கடந்த ஆண்டுகளில் உடல் பருமன் இருமடங்காக அதிகரித்துள்ளது என்றும் ஒரு ஆய்வை பிரதமர் மேற்கோள் காட்டினார்.

சமையல் எண்ணெய் பயன்பாட்டை 10 சதவிகிதம் குறைக்க வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார். உணவில் அதிக எண்ணெயை பயன்படுத்துவது, இதயநோய், நீரிழிவு நோய் மற்றும் உயர்

மோடி 4 - (17 )

ரத்த அழுத்தம் போன்ற நோய்களை ஏற்படுத்தும் என்றும் பிரதமர் தெரிவித்தார். உணவு பழக்க வழக்கங்களில் சிறிய மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் மக்கள் ஆரோக்கியமாகவும் நோயின்றியும் இருக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த சில ஆண்டுகளில் புலிகள், சிறுத்தைகள், ஆசிய சிங்கங்கள் உள்ளிட்டவைகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக பிரதமர் தெரிவித்தார். வனவிலங்கு பாதுகாப்புடன் தொடர்புடைய அனைவரையும் ஊக்குவிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் இயற்கை மற்றும வனவிலங்கு பாதுகாப்பில் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் பிரதமர் எடுத்துரைத்தார்.

இதனைத் தொடர்ந்து அவர் தமது உரையில், 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதும் மாணவ, மாணவியருக்கு பிரதமர் திரு.நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். பொதுத் தேர்வை எவ்விதமான மனஅழுத்தமுமின்றி, ஆக்கப்பூர்வமான உணர்வுடன் தேர்வு எழுதுமாறு கேட்டுக்கொண்டார். தேர்வு எழுதும் மாணவ, மாணவியர் சந்தோஷமாக இருக்குமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவுறுத்தினார்.

பிரதமர் மத்தியபிரதேசம் 1- (19 )

அனைவருக்கும் சுகாதாரம் என்பது தனது அரசின் முக்கியத் தூண்களில் ஒன்றாகும் என பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். அவர் இன்று மத்திய பிரதேசத்தின் சத்தர்பூர் மாவட்டத்தில் உள்ள பாகேஸ்வரில் மருத்துவம் மற்றும் அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிறுவனம் 10 ஏக்கரில் கட்டப்படும் என்றும், ஏழை புற்று நோய் நோயாளிகளுக்கு இலவச சிகிச்சை அளிக்கும் என்றும் பிரதமர் தெரிவித்தார். முதல்கட்டமாக இந்த மருத்துவமனையில் 100 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, அதில் நவீன எந்திரங்களும், சிறப்பு மருத்துவர்களும் செயல்படுவார்கள் என்று பிரதமர் தெரிவித்தார். மக்கள் ஆயுஷ்மான் யோஜனா மற்றும் ஜன் கேந்திரங்கள் போன்ற அரசு திட்டங்களை பயன்படுத்திக் கொள்ளுமாறு அவர் வேண்டுகோள் விடுத்தார். நிகழ்ச்சியைத் தொடர்ந்து அவர் இன்று மாலை போபாலில் அனைத்து பாஜக நாடாளுமன்ற உறுப்பினர்கள்

மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவார். மத்திய பிரதேசம், பீகார், அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களுக்கு இன்று முதல் 3 நாள் அரசுமுறை பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை பீகாரிலுள்ள பாகல்பூருக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அங்கு பிரதம மந்திரி கிசான் திட்டத்தின் 19ஆவது தவணையை விடுவிக்கவுள்ளார்.

பிரதமர் மத்தியபிரதேசம் 2- (3 )

இத்திட்டத்தில் 9.7 கோடிக்கும் அதிகமான விவசாயிகள் 21 ஆயிரத்து 500 கோடி ரூபாய்க்கு மேல் நேரடி நிதியுதவி பெறுவார்கள். நிகழ்ச்சியைத் தொடர்ந்து அவர் பீகாரில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் தொடக்கி வைக்கவுள்ளார்.

புதுச்சேரி நேவா - (16 )

புதுச்சேரி சட்டப்பேரவையை காகிதங்கள் இல்லாத சட்டப் பேரவையாக உருவாக்கும் வகையில் நேவா திட்டத்தின் கீழ் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான கணினி பயிற்சியை முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று துவக்கி வைத்தார். இத்திட்டம் 8.16 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதில் முதல் கட்டமாக, சட்டப்பேரவையில் எழுப்பப்படும் வினாக்களும், அதற்கான பதில்களும் மென்பொருள் மூலம் உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நடப்பு ஆண்டிற்கான பட்ஜெட் கூட்டத்தொடர் முழுவதும் காகிதமில்லா பட்ஜெட்டாக அமையவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்நிகழ்ச்சியில் சட்டப்பேரவைத் தலைவர் திரு. செல்வம், எதிர்க்கட்சித் தலைவர் திரு. சிவா, உள்ளிட்ட அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய சட்டப்பேரவைத் தலைவர் திரு. செல்வம்,

(வாய்ஸ்)

புதுச்சேரி நேவா 2 - (4)

இதற்காக வருகிற 26ஆம் தேதி துணைநிலை ஆளுநர் திரு.கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி மற்றும் தலைமைச் செயலருடன் சென்று பிரதமர் மற்றும் நிதியமைச்சரை சந்தித்து வலியுறுத்த உள்ளதாக அவர் கூறினார்.

**தர்மேந்திர பிரதான் - (9 )**

வளர்ந்த இந்தியா என்ற இந்தியா என்ற இலக்கை அடைய தேசிய கல்விக் கொள்கைத் திட்டம் நாடு முழுவதும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட வேண்டும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் கேட்டுக்கொண்டுள்ளார். டெல்லி பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற பின்னர் தமது எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், 2047ஆம் ஆண்டிற்குள் வளர்ந்த இந்தியா என்ற இலக்கை அடைய டெல்லி பல்கலைக்கழகம் தலைமையில் தேசிய கல்விக் கொள்கையை நாடுமுழுவதும் செயல்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

மாநாடு அமைதி காப்பாளர் - (7 )

பெண் அமைதி காப்பாளர்களுக்கான முதல் மாநாடு நாளை புதுடெல்லியில் நடைபெறவுள்ளது. இந்த இரண்டு நாள் மாநாட்டை மத்திய வெளியுறவு அமைச்சகம், பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் மையம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்துள்ளன. இந்த மாநாட்டில் 35 நாடுகளைச் சேர்ந்த பெண் அமைதி காப்பாளர்கள் பங்கேற்கின்றனர். மாநாட்டில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் முக்கிய உரை நிகழ்த்துகிறார்.

கும்பமேளா - (5)

உத்தரபிரதேச மாநிலத்தில் நடைபெறும் மகா கும்பமேளா விழாவை ஒட்டி புனித நீராடுவதற்காக இன்று அதிகாலை முதல் ஏராளமான மக்கள் குவிந்தனர். இதனையொட்டி அப்பகுதியில் உள்ள சாலைகளில் போக்குவரத்து நெரிசல் காணப்பட்டது. உத்தரபிரதேசத்தில் வரும் 26ஆம் தேதியுடன் மகா கும்பமேளா நிறைவு பெறுகிறது.

**கைது மீனவர்கள் - (6)**

கச்சத்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்கள் 32 பேரை எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி, இலங்கை கடற்படையினர் இன்று கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட மீனவர்கள் தலைமன்னார் கடற்கரை முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக்குப் பின்னர் அவர்கள் இலங்கை சிறையில் அடைக்கப்பட்டனர்.

**போப் பிரான்சிஸ் - (6)**

நிமோனியா பாதிப்பு காரணமாக ரோம் நகரிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள கத்தோலிக்க திருச்சபை தலைவர் போப் பிரான்சிஸ், உடல்நிலை பாதிக்கப்பட்டு தொடர்ந்து கவலைக்கிடமாக உள்ளதாக வாடிகன் தேவாலய நிர்வாகம் தெரிவித்துள்ளது. அவர் குணமடைய பிரார்த்தனை செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

சுவாமி தயானந்த சரஸ்வதியின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி அவருக்கு குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு அஞ்சலி செலுத்தினார்.

நாட்டில் சாதனை படைத்த பெண்களை இந்தாண்டு மகளிர் தினத்தன்று அடையாளப் படுத்த முடிவு செய்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

அனைவருக்கும் சுகாதாரம் என்பது தனது அரசின் முக்கியத் தூண்களில் ஒன்றாகும் என பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி சட்டப்பேரவையை, காகிதங்கள் இல்லாத சட்டப் பேரவையாக உருவாக்கும் வகையில், சட்டமன்ற உறு0ப்பினர்களுக்கான கணினி பயிற்சியை முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று துவக்கி வைத்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RM/RK/VM